"Under Section 173 BNSS"

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8040888

1. District : மாவட்டம் செங்கல்பட்டு PS: காவல்நிலையம் VGAC செங்கல்பட்டு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 03 Date: நாள் 28/09/2024

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

   (ii) Act சட்டம்: PL ACT AMENDMENT-2018 Sections பிரிவுகள்: 7, 7A

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 27/09/24 16.50 HRS Date to : நாள் வரை 28/09/24 02.00 HRS

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28/09/24 Time நேரம் 05.00 HRS

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28/09/24 Time நேரம் 05.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 21 KM வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், கூவத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. க. தமிழ்முருகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சந்திரன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12/11/76 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation தொழில் பணியில் துணை வட்டாட்சியர் பொறுப்பு DEO (g) Address : முகவரி மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம் மதுராந்தகம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) M. ஆனந்தகுமார் இளநிலை உதவியாளர் சார்பதிவாளர் பொறுப்பு, கூவத்தூர் 2) K. பிட்டுராமு 54/24 S/o இப்பன் No: 12/3, வெட்டரான் காலனி பல்லாவரம் 3) D. பன்னீர்செல்வம் 45/24 S/o தர்மன், 14 மேலத்தெரு, அச்சிறுபாக்கம் மதுராந்தகம் 4) வெங்கடேசப் பெருமாள் 42/24 S/o கோபால் 41, ஜெயநகர் கூவத்தூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

RS, 4,24,170/=

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு RS, 4,24,170/=

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ......................—.................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 2024 | [signature] 28/09/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28/09/2024 / 0600 HRS

Name: பெயர் S. சிரவணன்
Rank: நிலை D.S.P ........No. எண் ..........
V&AC, Chengalpattu.

**FIR வரிசை எண் 12-ன் தொடர்ச்சி**

இன்று 28.09.2024, 05.00 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி திரு.ச.தமிழழகன், மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர், செங்கல்பட்டு என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

அனுப்புநர், திரு.ச.தமிழழகன், மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர், செங்கல்பட்டு. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, செங்கல்பட்டு அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கூடுவாஞ்சேரி சார்-பதிவாளர் அலுவலகம் - 27.09.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. பார்வை: திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள், ந.க.எண்.183/2024, நாள் 27.09.2024. செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் நபர்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிப்பதாக தொடர்ந்து கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் (பொறுப்பு) துணை ஆய்வுக்குழு அலுவலரான என் தலைமையில், செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் செங்கல்பட்டு விஜிலென்ஸ் போலீசார் சகிதம் இரு துறை திடீர் கூட்டாய்வு 27.09.2024-ம் தேதி மாலை சுமார் 4.50 மணி முதல் 28.09.2024 காலை சுமார் 2.00 மணி வரை இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் முழுவதும் சோதனை மேற்கொண்டதில் தனி நபர்கள் மற்றும் புரோக்கர்களான 1.திரு.K.சிட்டிபாபு, வ/54 த/பெ. குப்பன் எண்.62/3 வெட்டர் லைன், பல்லாவரம், சென்னை-44. என்பவரிடமிருந்து ரூ.3,00,000/- 2. திரு.D.பன்னீர் செல்வம், வ/49 த/பெ. சுதர்மன், எண்.14 முல்லை தெரு, விக்னேஷ் அவென்யூ, மாடம்பாக்கம் - 603202. என்பவரிடமிருந்து ரூ.57,000/- 3. திரு.வெங்கடசுப்பிரமணியன், வ/42 த/பெ கோபாலன் எண்.41 சஞ்சய் நகர், காயரம்பேடு, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம் என்பவரிடமிருந்து ரூ1,190/-ம் ஆக மொத்தம் ரூ.3,58,190/-ம் மற்றும் அலுவலக ஊழியர்கள் 1) திரு.M.ஆனந்தமுத்து வ/46 இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் பொறுப்பு, சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின்

இருக்கையின் அருகில் இருந்து ரூ.14,930/-ம் 2) திரு.E.லோகேஷ் வ/25 த/பெ. இருசன், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். அவர்களின் இருக்கையின் கீழ் இருந்து ரூ.4,150/-ம் 3) திருமதி.S.தேவி வ/44 க/பெ. S.சரவணன், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம் அவரின் இருக்கையின் கீழ் இருந்து ரூ.300/-ம் மேலும், அலுவலக ஆண்கள் கழிப்பறையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராதப்பணம் ரூ.12,600/- மற்றும் அலுவலக டைனீங் ஹாலில் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.34,000/-என ஆக மொத்தம் ரூ.4,24,170/- (நான்கு லட்சத்து இருபத்து நான்கு ஆயிரத்து நூற்று எழுபது ரூபாய் மட்டும்) கைப்பற்றப்பட்டது மேற்படி அலுவலகத்தின் கழிவறை மற்றும் டைனிங்ஹாலில் இருந்த பணத்திற்கான விளக்கம் கேட்டபோது, (பொறுப்பு) சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலர்கள் யாரும் உரிய விளக்கம் அளிக்காததால் அந்த பணம் கணக்கில் வராத பணமாகவும் பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாகவும் இருக்கும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்கண்ட தனி நபர்கள் மற்றும் புரோக்கர்கள் ஆகியோர்கள் அவர்கள் வைத்திருந்த பணம் ரூ.3,58,190/-க்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால், அந்த பணம் (பொறுப்பு) சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணமாக இருக்ககூடும் என கருதியும் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலேசொன்ன அரசு அலுவலர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களிடமிருந்து (DEO) கைப்பற்றப்பட்ட பணத்திற்கு விளக்கம் கேட்டபோது சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் தனி நபர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், தனி நபர்கள் மற்றும் அலுவலக ஆஜரில் இருந்த அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்க கடிதங்கள் மொத்தம்-22 மற்றும் அலுவலக பதிவேடுகளின் சான்றொப்பமிட்ட நகல்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட ஏனைய அலுவலக ஆவணங்கள் என அனைத்தையும் இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. இது குறித்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக்கொள்கிறேன். (ஒம்) (திரு.ச.தமிழழகன்), மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர், செங்கல்பட்டு. இணைப்பு, 1) கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.4,24,170/-, 2) திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள், ந.க.எண். 183/2024, நாள்-27.09.2024, 3) பணம் கைப்பற்றபட்ட தனி நபர்களின் விளக்க கடிதம்-3, 4) அலுவலகம் ஆஜரில் இருந்த தனி நபர்களின் விளக்க கடிதம்-13, 5) அலுவலக ஊழியர்கள் அவர்கள் கைப்பட எழுதி கொடுத்த விளக்க கடிதம்-6, 6) அலுவலக

பதிவேடுகளின் சான்றொப்பம் இட்ட நகல்கள்-38 Sheets. 7) Indian Bank, Non-Employee Identity Card, Direct Selling Agent Name Tr.Venkata Subramanian.G, Date of issue 08.11.2017 என்ற அசல் அடையாள அட்டை- 1. காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு (பொறுப்பு) மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் திரு.பாலமுருகன் அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.ச.தமிழழகன், மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர் அவர்களின் செயல்முறைகள். முன்னிலை- திரு.ச.தமிழழகன், மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர். ந.க.எண்:- 183/2024, நாள்:- 27.09.2024. பொருள்:-திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம், செங்கற்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கூடுவாஞ்சேரி - சார்-பதிவாளர் அலுவலகம் - 27.09.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான செயல்முறைகள். ஆணை:- செங்கற்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் பொது மக்களிடமிருந்து, லஞ்சமாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக தொடர்ந்து கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், செங்கற்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், இன்று 27.09.2024-ம் தேதி மாலை சுமார் 4.50 மணி முதல் 28.09.2024 இரவு சுமார் 2.00 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் வருமாறு. இன்று 27.09.2024-ந்தேதி மாலை சுமார் 4.50 மணியளவில் இரு துறை கூட்டாய்வு செய்வதற்கு கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது, மேற்குறிப்பிட்ட அலுவலகமானது தாம்பரம் - செங்கற்பட்டு செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இடதுபுறம் உள்ள நெல்லிக்குப்பம் செல்லும் சாலையின் வலது புறம் அமைந்துள்ள டிபென்ஸ் காலனி செல்லும் சாலையின் இடது புறம் மேற்கு பார்த்து அமைந்துள்ளது. அந்த அலுவலகத்திற்குள் பார்ட்டி சகிதம் மெயின் கேட்டினை கடந்து உள்ளே சென்றபோது, இருபுறமும் தனி நபர்கள் அமரும் சிமெண்டால் ஆன இருக்கைகள் அமைந்துள்ளது. முன்னால் வரான்டா அதனை ஒட்டியவாறு தென் புறம் கழிப்பறைகள் அமைந்துள்ளது. வாரன்டாவை கடந்தபிறகு முன்னால் பத்திர பதிவிற்கு வரும் நபர்கள் அமரும்வண்ணம் Stainless Steel-லால் ஆன இருக்கைள் அமைந்துள்ளது. ஹாலை ஒட்டியவாறு வடபுறம் உள்ளே செல்லும் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலை கடந்த பிறகு கிழக்கு பார்த்தவாறு சார் பதிவாளர் அமரும் நாற்காலி மேஜை கணினிகள் உள்ளது. சார் பதிவாளர் அமரும் இடத்திற்கு இடது புறம் தெற்கு பார்த்தவாறு இளநிலை உதவியாளர் அமரும் இருக்கை அறை plywood தடுப்பால்

அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிரே Data Entry Operator இருக்கை அறை அதே plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. Data Entry Operator அறைக்கு அடுத்தவாறு அலுவலக உதவியாளர் அறை plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. அதனை ஒட்டியவாறு தெற்கு நோக்கி செல்லும் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலுக்கு ஒட்டியவாறு கிழக்கு பார்த்தவாறு ஒரு அறையும், அந்த அறையை ஒட்டி கிழக்கு பார்த்தவாறு மற்றொரு அறையும் உள்ளது. இந்த அறைக்கு எதிரே பெண்கள் கழிப்பறை அதனை ஒட்டி ஆண்கள் கழிப்பறை மேற்கு பார்த்தவாறு உள்ளது. சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே கண்ணாடி மற்றும் Plywood தடுப்பால் கணினி அறை அமைந்துள்ளது. சார் பதிவாளர் இருக்கைக்கு வடக்கே பதிவறை அமைந்துள்ளது. திரு.ஆனந்தமுத்து, இளநிலை உதவியாளர் பொறுப்பு சார் பதிவாளர் அவரை விசாரித்ததில், திரு.வே.வைத்தியலிங்கம் என்பவர் சார்பதிவாளர் என்றும், இன்று மாநில கணக்காயர் தணிக்கை தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ள சென்னை சென்றுள்ளதாகவும், அவருக்கு பதிலாக இன்று 27.09.2024-ம் தேதி கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலக பொறுப்பு சார் பதிவாளராக என்னை இன்று சார் பதிவாளர் பொறுப்பாக நியமித்திருப்பதாகவும் கூறினார். அவரிடம் நான் என்னை அறிமுகம் செய்துக் கொண்டும் மேலும் என்னுடன் உதவிக்கு வந்த செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.சரவணன், காவல் ஆய்வாளர் திரு.G.அண்ணாதுரை அவர்களையும் மற்ற காவல் ஆளினர்களான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.V.கதிர்வேல், தலைமைக்காவலர்கள் திரு.மோகன் (த.கா-1770), திரு.பரமேஸ்வரி (பெ.த.கா.660), திரு.தினேஷ் வினோ (த.கா.663) மற்றும் காவலர் திரு.பிரசாந்த் (கா.470) அறிமுகப்படுத்தி வைத்து, அனைவரது அடையாள அட்டையை காண்பித்தும், அவரவர்களை அவர் முன்பு சுயபரிசோதனை செய்தும் காண்பிக்கப்பட்டது. அலுவலகத்தில் கீழ் குறிப்பிட்ட அலுவலர்கள் ஆஜரில் இருந்தனர் அவர்களின் விவரம் மற்றும் கையிருப்பு பண பதிவேட்டின் விவரம் மற்றும் அவர்கள் வைத்திருந்த வைப்புத் தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள் | வைத்திருந்த பணம் | பணக் கையிருப்பு பதிவேட்டின் விவரம் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | திரு.M.ஆனந்தமுத்து வ/46 இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் பொறுப்பு, சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.1490/- | ரூ.2,000/- | பணக் கையிருப்பு பதிவேட்டில் முதலில் 2000 என்றும் பின்னர் 4000 என்றும் திருத்தப்பட்டுள்ளது. மேலும் அவரிடம் விவரம் கோர சரியான விளக்கம் கூறவில்லை. மேலும் அவர் கைவசம் ரூ.1490/- தினசரி செலவிற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வைத்திருந்தாக தெரிவித்ததால் அதனை ஏற்று ரூ.1490/- அவர் வசமே திருப்பி வழங்கப்பட்டது. |
| 2. | திரு.A.பிச்சைமுத்து, வ-58, த/பெ. அர்சுனன், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | கையிருப்பு இல்லை | ரூ.100/- | - |
| 3. | திரு.N.பிரான்சிஸ், வ/39 த/பெ. நவநீதம், கேமரா ஆப்ரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.510/- | ரூ.510/- | இரு தொகையும் குறிப்பிட்டுவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 4. | திரு.E.லோகேஷ் வ/25 த/பெ. இருசன் Data Entry Operator. சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.830/- | ரூ.830/- | இரு தொகையும் குறிப்பிட்டுவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 5. | திரு.K.பழனி வ/34 த/பெ. கண்ணன், Data Entry Operator. சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.350/- | ரூ.350/- | இரு தொகையும் குறிப்பிட்டுவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 6. | திருமதி.S.தேவி வ/44 க/பெ. S.சரவணன், Data Entry Operator. சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.600/- | ரூ.600/- | இரு தொகையும் குறிப்பிட்டுவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |

மேலும், சார் பதிவாளர் இருக்கையின் எதிரில் வலது புறத்தில் அமைந்துள்ள Data Entry Operator திரு.லோகேஷ் இருக்கையின் கணினி மேஜைக்கு கீழ் கணக்கில் வராத பணம் ரூ.4,150/- காணப்பட்டது. இது குறித்து விசாரிக்க உரிய விளக்கம் அளிக்காததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார் பதவாளர் இருக்கையின் எதிரில் இடது புறத்தில் அமைந்துள்ள இளநிலை உதவியாளர் திரு.ஆனந்தமுத்து பொறுப்பு சார் பதிவாளர் அவர்களின் இருக்கையின் அருகில் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.14,930/- காணப்பட்டது. இது குறித்து விசாரிக்க உரிய விளக்கம் அளிக்காததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. Data Entry Operator திருமதி.தேவி அவரது இருக்கையின் அருகில் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.300/- காணப்பட்டது. இது குறித்து விசாரிக்க உரிய விளக்கம் அளிக்காததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வின்போது கீழ்

குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் அவர்கள் வைத்திருந்த பண விவரம் மற்றும் பணம் வைத்திருந்ததற்காக கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம் | வைத்திருந்த இருப்புத்தொகை | பணத்திற்கான விளக்கம் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | திரு.K.சிட்டிபாபு, வ/54 த/பெ. குப்பன் எண்.62/3 வெட்டர் லைன், பல்லாவரம், சென்னை-44. 9551111674 | ரூ.3,00,000/- | அவர் வைத்திருந்த பணம் நகை அடமானம் வைத்தை மீட்பதற்காக பல்லாவரம் அடகு கடைக்கு செல்லும்போது தன்னுடைய ஓனர் திரு.ஜான் லாசரஸ் என்பவர் என்னை கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் பக்கத்தில் எலியேசர் என்பவரிடம் சென்று டாகுமண்ட் செய்ததற்கு பில் வாங்கி வரச் சொன்னார். அதற்காக நான் சார் பதிவாளர் அலுவலகம் வந்தேன் என கூறினார். | அலுவலகத்தின் உள்ளே இருந்த அவரை சோதனை செய்தபோது அவர் வைத்திருந்த Brown Colour Shoulder Bag-ல் ரூ.3,00,000/- பணம் காணப்பட்டது. இவர் கொடுத்த விளக்கம் ஏற்றுக் கொள்ளும் படியாக இல்லாததால் அப்பணம் சார்பதிவாளர் அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டுவந்திருந்த பணமாக இருக்கும் எனக்கருதி மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. |
| 2. | திரு.D.பன்னீர் செல்வம், வ/49 த/பெ. சு.தர்மன், எண்.14 முல்லை தெரு, விக்னேஷ் அவென்யூ, மாடம்பாக்கம் - 603202. 9003373900 | ரூ.57,000/- | நகை வாங்குவதற்கு நகை கடைக்கு செல்ல வீட்டில் இருந்து பணம் எடுத்து வந்ததாக தெரிவித்தார். | சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அவரை சோதனை செய்தபோது அவர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் ரூ.57,000/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அந்த பணம் குறித்து நகை வாங்குவதற்காக கொண்டு வந்ததாக கூறி தன்னிடம் அதற்கான நகைகடை Estimate உள்ளதாக கூறினார். ஆனால் Estimate எடுத்து காண்பிக்கும்படி கூறியபோது இல்லை என்றும், தான் வைத்திருக்கும் சாம்சங் செல்போனில் (IMEI 1 353069843656529/01, IMEI-2 353499743656529/01) Mobile NO.9003373900 உள்ளதாக கூறினார். ஆனால் அந்த செல்போனில் இருந்து எடுத்து காண்பிக்கும்படி கேட்டபோது அவர் அவருடைய மனைவியின் செல்நம்பர் 9500426252 என்ற வாட்ஸ்அப்-ல் இருப்பதாக சொல்லி பார்த்ததில் அவர் கூறியதுபோல |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எந்தவித நகைகடை Estimate Copy-யும் இல்லை. மேலும் அதில் ஒரு நகையின் புகைப்படம் மட்டும் இருந்தது. அவர் அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ள கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்துள்ள பணமாக கருதி மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது செல்போனில் இருந்து அவரது மனைவிக்கு அனுப்பிய 27.09.2024 தேதிக்கு உண்டான வாட்ஸஅப் சாட்டின் Screenshot Print out எடுத்து விசாரணைக்காக பெறப்பட்டது. |
| 3. | திரு.வெங்கடசுப்பிரமணியன், வ/42 த/பெ கோபாலன் எண்.41 சஞ்சய் நகர், காயரம்பேடு, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.1190/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | அலுவலகத்தின் உள்ளே இருந்த அவரை சோதனை செய்தபோது அவர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் ரூ.1,190/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது தனது கைசெலவிற்கு வைத்திருந்ததாகவும், தான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு வில்லங்க சான்று மற்றும் ஆவண நகல்களை பெற்று தருவதற்காகவும், சார் பதிவாளர் அலுவலகம் தொடர்பாக வேலைகளை முடித்து கொடுப்பதற்காகவும் தான் அடிக்கடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து செல்வதாகவும் தெரிவித்தார். மேலும் கணினி அறையில் அவருடைய அடையாள அட்டை சோதனையின்போது காணப்பட்டது. இதன் விவரம் பின்னால் சொல்லப்பட்டுள்ளது. இது குறித்து அலுவலக Data Entry Operator திருமதி.தேவி அவர்களை விசாரணை செய்ய பொது மக்களுக்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் புரோக்கராக செயல்பட்டு வருவதாக கூறினார். எனவே அவர் வைத்திருந்த பணம் பொறுப்பு சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்துள்ள பணமாக கருதி மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | திரு.M.பிரபாகரன் வ/36 த/பெ. முருகன், எண்.22 தயாளன் தெரு, அண்ணா நகர், பம்மல் 600085. | ரூ.7,500/- | தனது கை செலவிற்கு தேவைப்படும் என்று கருதி கொண்டு வந்ததாக தெரிவித்தார். | இவர் கீரப்பாக்கம் கீரின் சிட்டி லேஅவுட்-ல் இடம் வாங்குவதற்காக அது சம்மந்தமான EC போட்டு பார்க்க வந்ததாக தெரிவித்த விளக்கத்தை ஏற்று அவர் வைத்திருந்த பணம் ரூ.7500/- அவரிடமே திரும்ப கொடுக்கபட்டது. |
| 5, | திரு.M.ரவி த/பெ மணி எண்.40 பெருமாள் கோவில் தெரு, சிறுபாகல், வாலாஜாபாத், காஞ்சிபுரம். | ரூ.1000/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் வீடு வாடகைக்கு எடுக்க புரோக்கரிடம் செல்போன் மூலம் தொடர்பு கொண்டபோது அவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருமாறு தெரிவித்ததன்பேரில் சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.1000/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 6. | திரு.K.புருஷோத்தம்மன் வ/45, த/பெ.காசிலிங்கம், எண்.3/209, வேணுகோபால் தெரு, வண்டலூர். | ரூ.1200/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | தனது வழக்கறிஞரை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் எடுக்காததால், அவரை பாக்க சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.1200/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 7. | திரு.S.அருள்மொழி த/பெ சுப்பிரமணி, எண்.25 வள்ளுவர் தெரு, தவியல் கிராமம் (ம) அஞ்சல், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். | ரூ.1700/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | தான் காரனை புதுச்சேரியில் வாங்கிய பிளாட் பதிவு செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.1700/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 8. | திரு.P.அசோக் வ/26 த/பெ பாண்டியன், திரு.மோசஸ் வ/42, த/பெ ரத்னம் எண்.6/23 மாரியம்மன் கோவில் தெரு, T.களத்தூர், ஆலத்தூர் தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம். | ரூ.1300/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | தான் கூடுவாஞ்சேரி நந்திவரம் பகுதியில் உள்ள சர்வே எண்.34A மற்றும் B என்ற மனைகளை பத்திரபதிவு செய்ய வரைமுறையை எடுத்து வந்ததாக தெரிவித்தார்கள். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.1300/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 9. | திரு.M.எட்வின் வ/45 த/பெ மைக்கேல், எண்.42 துர்கா | ரூ.150/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக | இவர் கீரப்பாக்கம் கீரின் சிட்டி லேஅவுட்-ன் உண்மை தன்மையை கண்டறிய EC |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவென்யூ, மதுரைசாமி மடம், பெரம்பூர், சென்னை. | | தெரிவித்தார். | போட்டு பார்க்க வந்ததாக தெரிவித்த விளக்கத்தை ஏற்று அவர் வைத்திருந்த பணம் ரூ.150/- அவரிடமே திரும்ப கொடுக்கபட்டது. |
| 10. | திரு.V.ஞானஸ்கந்தன் வ/49 த/பெ வெங்கடராமானுஜம், எண்.1/535 A5 GB சபிதா பிளாட்ஸ், லேக் வியூ ரோடு, மடிபாக்கம், சென்னை - 91. | ரூ.1300/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் பத்திர பதிவு செய்ய சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.1300/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 11. | திரு.S.கார்த்திகேயன், வ/31 த/பெ சுப்புராமன், பிளாட் எண்.4A ராம் நகர் மெயின்ரோடு கிளாம்பாக்கம் கிராமம், ஊரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம். | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இவர் MODT ஆவணம் எண்.15394/2024 பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கையில் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. |
| 12. | ஆஸ்டின் சார்லஸ் பிரான்சிஸ், த/பெ ஹரி பிரான்சிஸ் எண்.285/2 1வது மெயின் ரோடு, அண்ணயப்பா லேஅவுட், பணத்தூர் டைன், வர்த்தூர், பெங்களூர், கர்நாடகா 560087. | ரூ.3300/- | தனது அன்றாட செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். | தக்ஷின் பிராபர்டி & டவலப்பர்ஸ், கண்டிகை, முருகமங்கலம் கிராமத்தில் சர்வே எண்.52/2 2200 சதுரடி, பிளாட் எண்.B26B என்ற இடத்தை ஆவண எண்.15470/2024-ன்படி பத்திர பதிவு செய்ய சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.3300/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 13. | திரு.V.ரஞ்சித் குமார், வ/34 த/பெ [illegible], தக்ஷின் பிராபர்டி அன்ட் டவலப்பர்ஸ், எண். 1076 A வளம்புரி அம்மன் தெரு, கீழகோட்டையூர், சென்னை - 127. | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | தக்ஷின் பிராபர்டி & டவலப்பர்ஸ், கண்டிகை, முருகமங்கலம் கிராமத்தில் சர்வே எண்.52/2 2200 சதுரடி, பிளாட் எண்.B26B என்ற இடத்தை ஆவண எண்.15470/2024-ன்படி பத்திர பதிவு செய்து கொடுக்க சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கையில் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. |
| 14. | திருமதி.K.மகாலட்சுமி, வ/50 க/பெ செந்தில்குமார், எண்.62 T.K.கோவில் தெரு, பாரதி நகர், ஜமின்பல்லாவரம், | ரூ.200/- | பஸ் செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். | மாடம்பாக்கம் கிராமம் சர்வே எண்.200/1பார்ட்-ன் வழிகாட்டி மதிப்பு கேட்பதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சென்னை-43. | | | வைத்திருந்த பணம் ரூ.200/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. |
| 15. | திரு.T.பிரபு வ/32 த/பெ தங்கவேல் பாண்டியன், எண்'.1/81 வடக்கு தெரு, பந்தபுலி, சங்கரன்கோவில் தாலுக்கா, தென்காசி மாவட்டம். | ரூ.26,500/- | தனது ரூம் வாடகை மற்றும் வழக்கறிஞர் செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்ததார். | இவர் திரு,பாலமுரளிகிருஉஷ்ணன் என்பவரிடமிருந்து கூடுவாஞ்சேரி நந்திவரம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.34/3A மற்றும் 3B என்ற மனையை பதிவு செய்வதற்கு சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்ததார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.26,500/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. |
| 16. | திரு.M.பேச்சிமுத்து த/பெ மாயாண்டி, எண்.34//2 காளமேகம் சாலை, முகப்பேர் வெஸ்ட், சென்னை-37. | ரூ.3,450/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | தான் ஆவண எண்.15466/ 2024-ன்படி கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்வதற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.3450/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. |

மேலும், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தை சோதனை செய்ததில், சார்பதிவாளர் அலுவலகம் உள்ளே மேலே குறிப்பிட்டவாறு ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை அமைந்துள்ள இடத்தில் ஆண்கள் கழிப்பறையில் ரூ.12,600/- பணம் கீழே காணப்பட்டதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலே குறிப்பிட்டவாறு பெண்கள் கழிப்பறைக்கு எதிரே உள்ள உணவருந்தும் அறையில் உள்ள மேஜைக்கு கீழே ரூ.34,000/- பணம் காணப்பட்டதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதுகுறித்து சார்பதிவாளர் பொறுப்பு திரு.ஆனந்தமுத்து மற்றும் அவரது அலுவலக ஊழியர்களிடம் விவரம் கேட்டபோது, அப்பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்ததால், அப்பணத்தை லஞ்சமாக பார்ட்டிகளிடம் பெற்று மேற்கண்ட இடங்களில் மறைத்து வைத்திருக்கலாம் என்றும், துக்கி வீசியிருக்கலாம் என கருதி அப்பணத்தை கணக்கில் வராத பணமாகவும், பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

<u>கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு.</u>

| வ.எண். | பணம் கைப்பற்றப்பட்ட நபரின் பெயர் விலாசம் | தனிநபர்/புரோக்கர்/அலுவலர் | கைப்பற்றபட்ட தொகையின் விவரம் |
|---|---|---|---|
| 1. | திரு.K.சிட்டிபாபு, வ/54 த/பெ. குப்பன் எண்.62/3 வெட்டர் லைன், பல்லாவரம், சென்னை-44, | தனி நபர் | ரூ.3,00,000/- |

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு.D.பன்னீர் செல்வம்,<br>த/பெ. சு.தர்மன்,<br>எண்.14 முல்லை தெரு,<br>விக்னேஷ் அவென்யூ,<br>மாடம்பாக்கம் - 603202. | தனி நபர் | ரூ.57,000/- |
| 3. | திரு.வெங்கடசுப்பிரமணியன், வ/42 த/பெ கோபாலன்<br>எண்.41 சஞ்சய் நகர், காயரம்பேடு, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | புரோக்கர் | ரூ.1190/- |
| 4. | திரு.லோகேஷ்.,<br>Data Entry Operator | Data Entry Operator அவரது இருக்கையின் அருகில் இருந்த கணக்கில் வராத பணம் | ரூ.4,150/- |
| 5. | திரு.ஆனந்தமுத்து<br>இளநிலை உதவியாளர் | சார் பதிவாளர் (பொறுப்பு) அவரது இருக்கையின் அருகில் இருந்து கணக்கில் வராத பணம் | ரூ.14,930/- |
| 6. | திருமதி.தேவி<br>Data Entry Operator | Data Entry Operator அவரது இருக்கையின் அருகில் இருந்து கணக்கில் வராத பணம் | ரூ.300/- |
| 7. | ஆண்கள் கழிப்பறையில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் | | ரூ.12,600/- |
| 8. | டைனிங் ரூமில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் | | ரூ.34,000/- |
| | | **மொத்தம்** | **ரூ.4,24,170/-** |

மேற்குறிப்பிட்ட தொகை ரூ.4,24,170/- (ரூ.500X835 நோட்டுகள், ரூ.200X15 நோட்டுகள், ரூ. 100X33 நோட்டுகள், ரூ.50X3 நோட்டுகள் மற்றும் 20 X11 நோட்டுகள்) என மொத்தம் நான்கு லட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று எழுபது ரூபாய் பணத்திற்கு பொறுப்பு சார்பதிவாளரோ, அலுவலகத்தில் பணியிலிருந்த அலுவலர்களோ மற்றும் பணம் வைத்திருந்தவர்களோ அதற்கான சரியான முகாந்திரம் கூறாததால், அனைத்தும் சார்பதிவாளர் பொறுப்பு அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக கணினி அறையில் மேஜைக்கு அடியில் Indian Bank, Non-Employee Identity Card, Direct Selling Agent Name Tr.Venkata Subramanian.G, Date of issue 08.11.2017 என்ற அடையாள அட்டை காணப்பட்டது. அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அடையாள அட்டை புகைப்படத்தில் உள்ள திரு.வெங்கட சுப்பிரமணியன் என்பவர் இவ்வலுவலகத்தில் பணியில் இல்லை. இவரை பற்றி திருமதி.தேவி, Data Entry Operator என்பவரை விசாரணை செய்ய பொது மக்களுக்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் இடையே புரோக்கராக செயல்பட்டு வருவதாக கூறினார். மேலும், இவ்வலுவலகத்திற்கு அடிக்கடி வந்து செல்பவர் என தெரிவித்தார். இன்று 27.09.2024-ந்தேதி காலையிலிருந்து சார்பதிவாளர் பொறுப்பு திரு.ஆனந்தமுத்து அவர்களால் 89 ஆவணங்கள் பதியப்பட்டுள்ளது. அவற்றில் 2 ஆவணங்கள் பதிவு செய்து

நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. அவைகள் Book IV Document No.282, 283 ஆகும். மேலும், அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளில், வருகைப்பதிவேடு-செப்டம்பர்/2024, தற்செயல் விடுப்பு பதிவேடு-2024, கையிருப்பு பணப்பதிவேடு DEO & IPCO-27.09.2024, அலுவலக தனி நபர் பண கையிருப்பு பதிவேடு-26.09.2024 & 27.09.2024, இயக்கப்பதிவேடு-செப்டம்பர்/2024, தன் பதிவேடு- 26.09.2024, பார்வையாளர் புத்தகம்-27.09.2024 ஆகியவற்றின் நகல்கள் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் அவர்களால் சான்றொப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட நகல்களில் நானும் சான்றொப்பம் செய்து மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி கூட்டாய்வின் போது **"லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்"** என்ற அறிவிப்பு பலகை இல்லை. மேலும், இக்கூட்டாய்வின்போது பணம் கைப்பற்றப்பட்ட நபர்களை விசாரித்தும், அலுவலக ஆஜரில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் அவரவர்களது விளக்கங்களை எழுத்து மூலமாக தனித்தனியாக எழுதி கொடுத்துள்ளனர். தனி நபர்களை விசாரணை முடித்து, மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 27.09.2024 தேதி மாலை 04.50 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 28.09.2024 இரவு 2.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

1. ஓம் திரு.M.ஆனந்தமுத்து வ/46
இளநிலை உதவியாளர்,
சார் பதிவாளர் பொறுப்பு,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

2. ஓம் திரு.A.பிச்சைமுத்து,
வ-58, த/பெ. அர்சுனன்,
அலுவலக உதவியாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

3. ஓம் திரு.N.பிரான்சிஸ்,
வ/39 த/பெ. நவநீதம்,
கேமரா ஆப்ரேட்டர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

4. ஓம் திரு.E.லோகேஷ் வ/25
த/பெ. இருசன்
Data Entry Operator.
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

5. ஓம் திரு.K.பழனி வ/34
த/பெ. கண்ணன்,
Data Entry Operator.
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

6. ஓம் திருமதி.S.தேவி வ/44
க/பெ. S.சரவணன்,
Data Entry Operator.
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

7, ஓம் திரு.K.சிட்டிபாபு, வ/54
த/பெ. குப்பன்
எண்.62/3 வெட்டர் லைன், பல்லாவரம்,
சென்னை-44.

8. ஓம் திரு.D.பன்னீர் செல்வம்,
வ/49 த/பெ. சுதர்மன்,
எண்.14 முல்லை தெரு,
விக்னேஷ் அவென்யூ,
மாடம்பாக்கம் - 603202.

9. ஓம் திரு.வெங்கடசுப்பிரமணியன்,
வ/42 த/பெ கோபாலன்
எண்.41 சஞ்சய் நகர், காயரம்பேடு,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

10. ஓம் திரு.கதிர்வேல்,
சிறப்பு உதவி ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

11. ஓம் திருமதி.பரமேஸ்வரி,
பெ.த.கா.660
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

12. ஓம் திரு.G.அண்ணாதுரை
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

13, ஓம் திரு.S.சரவணன்,
துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

14, ஓம் திரு.ச.தமிழழகன்,
மண்டல துணை வட்டாட்சியர், மதுராந்தகம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக்
குழு அலுவலர், செங்கல்பட்டு.

ஐயா,

மேலே கண்ட புகாரினைப் பெற்று செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.3/AC/2024/CP பிரிவு 106 BNSS and 7, 7A PC Act Amendment 2018 ஆக இன்று 28.09.2024 / 05.00 மணிக்கு வழக்கு பதிந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் செயல்முறை ஆணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் Form-91 ஆகியவற்றை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டது. ஓம். 28.09.2024 DSP V&AC, CPT.

28/09/2024.
Deputy Superintendent of Police
Vigilance and Anti - Corruption
Chengalpattu - 603 001.